**<u>2018 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 27.04.2018 ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 4.00 மணியளவில் திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அறையில் நடைபெற்ற இயல்பு கூட்ட பொருள்</u>**

==========================================================

**1)** இம்மாநகராட்சி பொது சுகாதாரப் பிரிவில் இயங்கி வரும் வாகனம் TN.57 J 6564 வாகனத்திற்கு தகுதிச் சான்று முடிவடைவதால் மேலும் ஓராண்டிற்கு தகுதிச் சான்று பெறுவதற்கும், வாகனத்தின் பழுதுகளை சரி செய்வதற்கும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.50,000/–க்கு (ரூபாய் ஐம்பதாயிரம் மட்டும்) அனுமதி வேண்டி மாமன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.3080/2018/எச்2)

**<u>அலுவலக குறிப்பு</u>**

1. மாமன்றம் அனுமதிக்கலாம்.
2. பணியின் அவசர அவசிய கருதியும், நிர்வாக நலன் கருதியும், தொடர் நடவடிக்கை மேற்கொண்டதை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**2)** திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் ஊதியம் இதுநாள்வரை கருவூலகம் வழியாக பட்டியல் சமர்ப்பிக்கப்பட்டு தொகை அனுமதிக்கப்பட்டது. ஆனால் மாநகராட்சி ஆணையரின் பணியிடம் இணை இயக்குநர் பதவியுடையது என்பதால் இப் பதவியில் அயற்பணியில் பணிபுரிந்து வருவதாலும், அவரின் ஊணியம் மாநகராட்சி நிதியிலிருந்து தான் வழங்கிட வேண்டும் என்றும் ( மற்ற மாநகராட்சியைப் போல்) மாவட்ட கருவூலகம் மற்றும் மாநில நிதிக் கணக்காயர் அலுவலகம் வாயிலாக அறிவுறுத்தப்பட்டு ஜனவரி 2018 மற்றும் பிப்ரவரி 2018ம் மாதங்களுக்குரிய ஊதியப் பட்டியல் கருவூலகத்திலிருந்து திருப்பப்பட்டுள்ளது. ஏனவே, திண்டுக்கல் நகராட்சி மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட தேதியிலிருந்து மாநகராட்சி ஆணையர் அவர்களுக்கு மாநகராட்சி பொது நிதியிலிருந்து தொடர்ந்து இனி வரும் காலங்களில் ஊதியம் வழஙக மாமன்ற அனுமதிக்கு. ( ந.க.எண். 13803 / 2015/ சி 1)

**<u>அ.குறிப்பு</u>**

திண்டுக்கல் நகராட்சி மாநகராட்சியாக 19.2.2014 ம் தேதியன்று தமிழக அரசு சட்டம் 25/ 2014 ன்படி தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து ஆணையர் அவர்களின் பணியிடத்திற்கான ஊதியத்தை பொது நிதியிலிருந்து வழங்கலாம்.

---

**3)** கோயம்புத்தூர், தமிழ்நாடு நகரியல் பயிற்சி மையத்தின் இயக்குநர் (பொ) அவர்களின் கடிதம் ந.க.எண். 359/ 2017/ அ2, நாள் 21.3.2018 ன்படி திண்டுக்கல் நகராட்சி 19.2.2014 முதல்

மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு ஆணையிடப்பட்டுள்ளதால் 2014-15 ம் ஆண்டு முதல் கீழ்க்கண்ட விபரப்படி திருத்திய பங்களிப்புத் தொகையினை செலுத்திடக் கோரப்பட்டுள்ளது.

| வருடம் | ஏற்கனவே செலுத்தப்பட்டது ரூ. | மாநகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதால் செலுத்த வேண்டிய வித்தியாசத் தொகை ரூ. |
|---|---|---|
| 2014-2015 | 1,50,000/- | 50,000/- |
| 2015-2016 | 1,50,000/- | 50,000/- |
| 2016-2017 | 1,50,000/- | 50,000/- |
| | | 1,50,000/- |

மேற்கண்ட தொகை ரூ.1,50,000/- உடன் 2017-18ம் ஆண்டிற்கு மாநகராட்சி பங்களிப்புத் தொகை ரூ.2,00,000/- சேர்த்து மொத்தம் ரூ.3,50,000/- கோவை பயிற்சி மையத்திற்கு செலுத்திட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண். 1602/ 2017 / சி 1)

<u>அ.குறிப்பு</u>

மாமன்றம் அனுமதி வழங்கலாம்

---

**4)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான கீழ்க்கண்ட ஆண்டு உரிம இனங்களை (2018-2021) கடந்த 19.04.2018ம் தேதி அன்று பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட விபரப்படி ஏலம்/ஒப்பந்தப்புள்ளிகள் வரப் பெற்றுள்ளது.

| **வ. எண்** | **உரிம இனம்** | **பெயர் மற்றும் முகவரி** | **ஏலத் தொகை ரூபாயில்** | **ஒப்பந்த புள்ளி ரூபாயில்** |
|---|---|---|---|---|
| 1 | 15. காமராஜர் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 15/- வீதம் நுழைவுக் கட்டணம் வசூலித்து கொள்ளும் உரிமம் | 1) திரு. டி. செல்வம், 97/3 நேதாஜி நகர், சந்தைரோடு, திண்டுக்கல் | - | **30,23,500/-** |
| | | 2) திரு. எஸ். கோபால கிருஷ்ணன், 211, 7வது தெரு, மேட்டுப்பட்டி, திண்டுக்கல் | - | **25,00,400/-** |

மேற்காணும் வரப்பெற்ற ஏலம் / ஒப்பந்தப்புள்ளிகளின் குத்தகை உரிம இனங்களை 01.04.2018ம் தேதி முதல் 31.03.2021 முடிய உள்ள காலத்திற்கு ஒப்படைப்பு செய்ய கீழ்கண்டவாறு மாமன்றத்தின் அனுமதி கோரலாம். **(ந.க.எண்.1018/2018/அ7).**

<u>அலுவலகக் குறிப்பு</u>

வரிசை 1ல் உள்ள 19.04.2018ல் நடைபெற்ற காமராஜர் பேருந்து நிலையத்திற்கு வந்து செல்லும் பேருந்துகளுக்கு நாள் ஒன்றுக்கு ரூ. 15/- வீதம் நுழைவுக் கட்டணம் வசூலித்து

கொள்ளும் உரிம இனத்திற்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. டி. செல்வம், திண்டுக்கல் என்பவர் உயர்ந்த ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 30,23,500/– கோரியுள்ளார்.

மேற்படி தொகை 3 ஆண்டு சராசரி தொகையை விட கூடுதலாகவும், கடந்த ஆண்டு தொகைக் காட்டிலும் குறைவாகவும் உள்ளது. அரசு பேருந்து கழகத்தால் இயக்கப்படும் பேருந்துகள் பழுது காரணமாக 59 பேருந்துகள் இயக்கம் நிறுத்தப்பட்டுள்ளது என்பதால் குத்தகைதாரருக்கு அதிக இழப்பு ஏற்படும் நிலை உள்ளதால் சராசரி தொகை அடிப்படையில் கோரியுள்ளார். மேற்படி வசூல் பணியை அலுவலக பணியாளர் மூலம் மேற்கொண்டால் ஒரு வேளைக்கு 4 நபர்கள் வீதம் நாளொன்றிற்கு மூன்று வேளையும் சேர்த்து 12 நபர்கள் தேவைப்படுகின்றனர். அந்த அளவிற்கு மாநகராட்சியில் பணியாளர்கள் இல்லை. தினசரி பேருந்து நிலையத்திற்கு நுழைவுக் கட்டணம் செலுத்தும் பேருந்துகளின் எண்ணிக்கை 640 ஆகும். மேலும், கடந்தாண்டு நுழைவுக் கட்டண வசூலில் இழப்பு ஏற்பட்டதற்கு 31.03.2018 முடிய தடையாணைப் பெறப்பட்டு தற்போது வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே, கடந்த மூன்று ஆண்டு சராசரி தொகையை விட கூடுதலாக கோரப்பட்டுள்ள ஒப்பந்தப்புள்ளி தொகை ரூ. 30,23,500/–ஐ கோரியுள்ள திரு. டி. செல்வம் என்பவரது ஒப்பந்தப் புள்ளியினை ஏற்கலாம்.

---

**5)** இம் மாநகராட்சியில் நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் நிர்வாக அனுமதிக்கிணங்க TUFIDCO LOAN 2017-18 FUND” நிதியின் கீழ் 9434 எண்ணிக்கை கழிவுநீர் குழாய்கள் இணைப்பு வழங்கும் பணிக்கு 11.04.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றன.

1) திரு. என். ராஜசேகரன்
2) பி.எம்.பி. கன்ஸ்ட்ரக்ஷன்ஸ்

முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் திரு. என். ராஜசேகரன், ஒப்பந்ததாரரது ஒப்பந்தப்புள்ளி தொழில்நுட்ப ரீதியாக தகுதி வாய்ந்தது என இம் மாநகராட்சி ஒப்பந்தப்புள்ளி ஒப்பு நோக்கும் குழுவினரால் 19.04.2018 ஆம் தேதிய கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. அதன்படி, 26.04.2018 மாலை 3.30 மணியளவில் ஒப்பந்ததாரரின் விலை ஒப்பந்தப்புள்ளி (Price Bid) திறக்கப்பட்டு ஒப்பு நோக்கு பட்டியல் (Comparative Statement) தயார் செய்யப்பட்டது. அதன் விபரம் பின்வருமாறு.

1) திரு. என். ராஜசேகரன் – 4.97 % மதிப்பீட்டை விட கூடுதல்

பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை

விட 4.97 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு.என். ராஜசேகரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.2568/ 2012/ இ 4)

<u>அலுவலக குறிப்பு</u>

1) லை பணிக்கு ரூ.450.00 இலட்சம் இலட்சம் மதிப்பில் தயாரிக்கப்பட்டுள்ள மதிப்பீட்டிற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 4775/UGSS-1/2018, நாள் 26.02.2018 இல் நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளது.

2) பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.97 சதவீதம் கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள திரு. என். ராஜசேகரன், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

3) அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டை விட கூடுதலாகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

---

**6)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியியல் பிரிவு வாகனம் டி.என்.57.எசி.3740 ன் டயர்கள் மிகவும் பழுதடைந்த காரணத்தால் மேற்கண்ட வாகனத்திற்கு புதிய டயர்கள் வாங்க உத்தேச செலவினத் தொகை ரூ.30000/– (டயர் ஒன்றுக்கு ரூ.7500/– வீதம் 4 டயர்களுக்கு) குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 3970 / 2018 / இ3 )

<u>அ.குறிப்பு</u>

மாமன்றம் அனுதிக்கலாம். மற்றும் குடிநீர் பணியின் அவசியத்தை கருத்தில் கொண்டு பிரிவு.15 ன் கீழ் பணி மேற்கொள்ளலாம்.

---

**7)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் வாகனம் டி.என்.57.எ.2782 க்கு பேட்டரி பொருத்தப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதாலும் மேலும் வாகனத்தை இயக்க சிரமமாக உள்ளதாலும் புதிய பேட்டரி (மின்கலப் பெட்டி) சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.13000/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண். 2846 / 2018 / இ3 )**

அலுவலக குறிப்பு–

குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் ரூ.13000/–க்கான செலவினத்தை மாமன்றம் அனுமதிக்கலாம்.

**8)** திண்டுக்கல் மாநகராட்சி ஆணையர் அவர்களின் அலுவலக பயன்பாட்டிற்கு உபயோகப்படுத்தி வரும் ஈப்பு வாகனம் எண். டி.என்.57.பிசி.1777 க்கு பழுதுகள் ஏற்பட்டு சரிவர இயக்க இயலாத நிலையில் உள்ளதால் மேற்படி வாகனத்தின் பழுது நீக்கம் செய்யும் பணியினை மேற்படி வாகனத்தின் தயாரிபபு நிறுவனத்தினரின் நேரடி அங்கீகாரம் பெற்ற டிவிஎஸ்.சுந்தரம் அய்யங்கார் பணி மனை, திண்டுக்கல்லில் ஒப்படைத்து பழுது பாாக்கவும் ஆகும் உத்தேச செலவினம் ரூ.15000/– பொது நிதியிலிருந்து மேற்கொள்ள மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

( ந.க.எண். 3014 / 2018 / இ3 )

**அ.குறிப்பு**

பணியின் அவசர அவசியத்தை கருதி மாமன்றத்தின் அனுமதியை எதிர்நோக்கி மேல் நடவடிக்கையை தொடர மாமன்றம் அனுதிக்கலாம்

---

**9)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் வாகனம் டி.என்.57.எ.3210 க்கு பேட்டரி பொருத்தப்பட்டு நான்கு ஆண்டுகளுக்கு மேலாகி விட்டதாலும் மேலும் வாகனத்தை இயக்க சிரமமாக உள்ளதாலும் புதிய பேட்டரி (மின்கலப் பெட்டி) சப்ளை செய்யும் பணிக்கு ஆகும் உத்தேச செலவினம் தொகை ரூ.13500/–க்கு மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண். 2845 / 2018 / இ3 )**

**அலுவலக குறிப்பு–**

குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் ரூ.13500/–க்கான செலவினத்தை மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**10)** திண்டுக்கல் மாநகராட்சி – மாநகராட்சி எல்லைக்குப்பட்ட திண்டுக்கல் டவுன் 1வது வார்டு கே.கே. நகர் பழனிரோடு, நகரளவு எண் 630,631,633,634,634/1 மற்றும் புதிய நகரளவு எண் 42,43,44 ல் குடியிருக்கும் மக்களுக்காக செட்டிநாயக்கன்பட்டி கிராமத்திற்கு சமந்தப்பட்ட இடத்தில் மாநகராட்சி நிர்வாகத்தினரால் குப்பை கிடஙகை சுற்றி காம்பவுண்ட் சுவர் கட்டுவதற்கு ஏற்பாடு செய்யப்படுவதை தடுத்து குப்பை கிடஙகின் வடக்கு ஓரத்தில் ரோடு வசதி அமைத்துத் தருமாறு திரு. ரகுபதி த/பெ. பரட்டை செட்டியார் பழனிரோடு என்பவரால்

சென்னை உயர்நீதி மன்ற மதுரைகிளை (பெஞ்சு) நீதிமன்றம் WP(md) No/ 5438 டிக 2018 ல் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

இந்நிலையில் மேற்படி வழக்கில் மாநகராட்சி சார்பாக வழக்காட திரு. ஜே. லாரன்ஸ் (சென்னை உயர்நீதிமன்ற வழக்கு) அவர்கள் நியமனம் செய்யப்பட்டுள்ளதால் அன்னாருக்கு வழக்கு கட்டணமாக ரூ.7500/– வழங்க அனுமதி வேண்டப்படுகிறது. அதன் விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**(ந.க.எண். 3521 /2018/எப்3)**

<u>அலுவலக குறிப்பு–</u>

1. வழக்கறிஞர் திரு. ஜே. லாரன்ஸ் அவர்களை நியமனம் செய்யப்பட்டதற்கு மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.
2. மேற்படி வழக்கிற்கு வழக்கறிஞர் கட்டணமாக ரூ. 7,500/– வழங்க மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**11)** திண்டுக்கல் மாநகராட்சிக்கு சொந்தமான மதுரை ரோடு சாத்தங்குடி நாடார் திருமண மண்டபத்திற்கு எதிர்புறம் வார்டு எண்5, பிளாக் எண் 25, நகரளவு எண். 115ல் (4240 ச.மீ) 1 ஏக்கர் 5 செண்ட் நிலத்தினை தமிழ்நாடு வக்பு வாரியத்தின் கீழ் இயங்கும் பேகம்பூர் மாஸ்க் (பள்ளிவாசல்) மற்றும் தர்கா நிர்வாகத்திற்கு 20 (இருபது) ஆண்டுகளுக்கு குத்தகைக்கு சதுர மீட்டருக்கு ரூ.1/– என்ற விகிதத்தில் குத்தகை நிர்ணயம் செய்து நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழஙகல் (மா,ற 2) அரசாணை (நிலை) எண் 132 , நாள் 21.12.2017ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது என்ற விபரம் மாமன்றத்தின் பார்வைக்கும் ஒப்பதலுக்கும் சமர்ப்பிக்கப்பட்டது. ( ந.க.எண்.4589/ 2004/ எப்1 )

<u>அலுவலக குறிப்பு–</u>

1. அரசாணை (நிலை எண்)132 , நாள் 21.12.2017 மாமன்றம் பதிவு செய்யலாம்.
2. குத்தகை விபரஙகளை உரிய பதிவேட்டில் பதிவு செய்த ஆவணப்படுத்திட வருவாய் பிரிவில் நடவடிக்கை எடுக்கப்பட்ட விபரமும் பதிவு செய்யலாம்.

---

**12)** இம்மாநகராட்சியில் பொது சுகாதாரப் பிரிவு மூலம் தூய்மை இந்தியா திட்டம் சிறப்பாக செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இதன்படி மாநகராட்சி 48 வார்டுகளிலும், பொது இடஙகளில் மல ஜலம் கழித்தலை தடுக்கும் விதமாக, தனிநபர் கழிப்பிடம் கட்டுதல், பொது மற்றும் சமுதாய கழிப்பறைகளை உபயோகப்படுத்துதல் குறித்தும் திடக்கழிவுகளை முறையாக கையாளும்

விதமாக திடக்கழிவுகளை ஈர மற்றும் உலர் கழிவுகள் என தரம் பிரித்து சேகரிக்கும் பணிகள் மற்றும் மக்காத பாலித்தீன் பைகள் உபயோகத்தைத் தடுத்தல், ஆகிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இப்பணிகள் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாக மாநகர் முழுவதும் 48 வார்டுகளிலும் போஸ்டர்கள், ஸ்டிக்கர்கள் A3 அளவு கலர் ஸ்டிக்கர்கள் அச்சிட்டு, அனைத்து குடியிருப்புகள் மற்றும் குடிசைப்பகுதிகள், வணிக நிறுவனங்களில் ஒட்டி பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திடவும், மாநகராட்சி முழுவதும் தூய்மை இந்தியா திட்டப்பணிகள் குறித்தும், பிளாஸ்டிக் பைகள் உபயோகத்தை தடுத்திடவும், திடக்கழிவுகளை உருவாகும் இடத்திலேயே உலர் கழிவுகள் மற்றும் ஈரக்கழிவுகளை தனித்தனியே தரம் பிரித்து சேகரித்தல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தும் விதமாகவும் இப்பணிகளில் சிறப்பாக ஒத்துழைப்பு வழங்கும் குடியிருப்புகளை பாராட்டும் விதமாக ஸ்மைலி ஸ்டிக்கர்களும் கீழ்க்கண்டவாறு A3 அளவு மற்றும் A4 அளவு கலர் ஸ்டிக்கர்கள் அச்சிட்டுப்பயன்படுத்தலாம்.

| வ.எண் | A3, A4 அளவு ஸ்டிக்கர்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | பிளாஸ்டிக் உபயோக தடுப்பு மற்றும் பாலித்தீன் பைகள் இலவசமாக வழஙகக் கூடாது விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் (A3 SIZE) | 10000 |
| 2 | காகிதத்தைக் கையிலெடு பிளாஸ்டிக்கை கைவிடு ஸ்டிக்கர்கள் (A3 SIZE) | 2000 |
| 3 | மறு சுழற்சிக்கான பிளாஸ்டிக் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் (A3 SIZE) | 2000 |
| 4 | திடக்கழிவு மேலாண்மை நமது குப்பை நமது பொறுப்பு ஸ்டிக்கர்கள் (A3 SIZE) | 10000 |
| 5 | மக்கும் குப்பை மக்காத குப்பை தரம் பிரித்தல் ஸ்லோகன் விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் (A3 SIZE) | 10000 |
| 6 | கைகழுவுவதற்கான சரியான வழிமுறைகள் குறித்தான விழிப்புணர்வு ஸ்டிக்கர்கள் (A3 SIZE) | 200 |
| 7 | டெஙகு தடுப்பு வருமுன் காப்போம் விழப்புணர்வு மற்றும் ஸ்மைலி ஸ்டிக்கர்கள் (A4 SIZE) | 20000 |
| **மொத்தம்** | | **54200** |

மொத்தம் 54200 எண்ணிக்கையில் A3 அளவு மற்றும் A4 கலர் அச்சிட்டு பயன்படுத்திடவும், அதற்கான செலவுத் தொகை ரூ.10,00,000/- (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) – ற்கு அனுமதி வேண்டியும் தகுதியான நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி பெற்று இப்பணியை மேற்கொள்ளவும் மாமன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் வைக்கப்படுகிறது.

**அ.குறிப்பு**

தூய்மை இந்தியா திட்டம் நிதியிலிருந்து இப்பணியை மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

**13)** இம்மாநகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளில் சுற்றித் திரியும் தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திட கருத்தடை செய்யும் பணியானது செயலாளர், விலங்குகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் அமைப்பிற்கு புரிந்துணர்வு ஒப்பந்தம் மூலம் ஒப்படைக்கப்பட்டு, கருத்தடை செய்யும் பணிகள் மேற்கொள்ளப்பட்டது. இப்பணியானது மேற்படி விலங்குகள் நல அமைப்பால் கடந்த 13.11.2016க்கு பிறகு எவ்வித கருத்தடைப் பணிகளும் மேற்கொள்ளவில்லை. எனவே மேற்கண்ட மேற்கொள்ள இவ்வலுவலகத்தால் கடந்த 03.03.2017, 27.06.2017 மற்றும் 14.11.2017 ஆகிய தேதிகளில் விளக்கம் அளித்திட அறிவிப்புகள் வழஙகப்பட்டும், மேற்படி நல அமைப்பு நாளது தேதி வரை தெருநாய்களுக்கு கருத்தடை பணிகள் மேற்கொள்ளவில்லை. இது தொடர்பாக செயலாளர், விலங்குகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் அளித்துள்ள விளக்க கடிதத்தில் ‘‘விலஙகுகள் நல வாரியத்திடமிருந்து வரவேண்டிய 50 விழுக்காடு செலவுதொகை நாளது தேதிவரை தஙகளுக்கு கிடைக்கப்பெறாததால், ஏற்பட்டுள்ள நிதி நெருக்கடி மற்றும் சில இதர காரணஙகளால் இப்பணிகளில் தொய்வு ஏற்பட்டுள்ளதாக’’ தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் பொதுமக்களின் நலன் கருதி, வேறொரு அமைப்பின் மூலம் கருத்தடைப் பணிகள் மேற்கொள்வதில் ஏற்படும் கால தாமதத்தினை கருத்தில் கொண்டு விலஙகுகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் இம்மாநகராட்சியுடன் ஏற்படுத்தப்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை விலக்கிக் கொள்வதுடன் வேறு விலஙகுகள் நல அமைப்பு பொறுப்பேற்கும் வரை தெருநாய்கள் கருத்தடை பணியை மேற்கொள்ள வேண்டும் என இம்மாநகராட்சியால் தெரிவிக்கப்பட்டது.

கடந்த ஒரு ஆண்டாக தெரு நாய்களுக்கான கருத்தடை செய்யும் பணி மேற்கொள்ளாததால் தெரு நாய்களின் இனப்பெருக்கம் அதிகரித்து பொது மக்களுக்கு தொல்லைகள் ஏற்படுவதாக தினசரி நாளேடுகளின் மூலமாகவும் தொலைபேசி வாயிலாகவும் மாநகராட்சிக்கு புகார்கள் வந்தவண்ணம் உள்ளது. எனவே இப்பணியின் அவசர அவசியம் கருதியும் பொது மக்களின் நலன் கருதியும், தெருநாய்களுக்கு கருத்தடை செய்யும் பணிகளை விரைந்து மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இம்மாநகர் நல அலுவலர் மற்றும் இணை இயக்குநர் கால்நடைகள் பராமரிப்புத் துறை, திண்டுக்கல், அவர்களுடன் 02.04.2018 அன்று நடத்தப்பட்ட கலந்தாய்வு கூட்டத்தில், (1) தெருநாய்களுக்கான கருத்தடைப் பணியை மேற்கண்ட விலஙகுகள் நல அமைப்பு உடனடியாக மேற்கொண்டு, அதன் அறிக்கையை ஆணையருக்கு வழஙகவேண்டும் எனவும், (2) அதற்குண்டான செலவு தொகை ரூபாய்.700/– (ஏழு நூறு மட்டும்)ஐ இம்மாநகராட்சி மேற்கண்ட விலஙகுகள் நல அமைப்பிற்கு வழஙகுவதெனவும், மேற்கண்ட தொகையில் 50 விழுக்காட்டினை விலஙகுகள் நல வாரியத்திடமிருந்து

இம்மாநகராட்சி நேரடியாக பெற்றுக்கொள்ளவும், (3) மேற்கண்ட விலங்குகள் நல அமைப்பு கருத்தடைப் பணி மேற்கொள்ளப்படவில்லையெனியல் மாநகராட்சி நிர்வாகமே தெருநாய்களின் இனப்பெருக்கத்தை கட்டுப்படுத்திட அரசு கால்நடை மருத்துவமனையின் மருத்துவர்களை கொண்டு தெருநாய்களுக்கு தினசரி அறுவைசிகிச்சை செய்யவும் முடிவுகள் செய்யப்பட்டது என்ற விவரம் மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

மேலும், மேற்படி கலந்தாய்வு கூட்டத்தின் முடிவுகளின்படி விலங்குகள் நல அமைப்பு, கோவிந்தபுரம், திண்டுக்கல் அமைப்பின் நிதி நிலை பற்றாக்குறையாக உள்ள காரணத்தினால் விலங்குகள் நல வாரியித்திடமிருந்து 50% செலவு தொகையினை மேற்படி அமைப்பு உடனடியாக பெற இயலாததால், விலங்குகள் நல வாரியத்திடமிருந்து இம்மாநகராட்சியே மேற்படி 50% செலவு தொகையினை நேரடியாகப் பெற்றுக்கொள்ளவும், 01.04.2018க்கு பின் கருத்தடை மேற்கொள்ள வேண்டியுள்ள 1152 தெரு நாய்களுக்கு கருத்தடை செய்ய நாய் ஒன்றிற்கு ரூ.700/– வீதம் ஆகும் உத்தேச செலவினம் ரூ.8,06,400/– (ரூபாய் எட்டு லட்சத்து ஆறாயிரத்து நானூறு மட்டும்)க்கும் மாமன்றத்தின் அனுமதிக்கு பொருள் வைக்கப்படுகிறது. (ந.க.எண்.4729 /2012/எச்3).

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

1.மாமன்றம் அனுமதிக்கலாம்.

2. செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அனுமதிக்கலாம்.

3. பொதுமக்களின் நலன் கருதி விலங்குகள் நல வாரியித்திடமிருந்து 50% செலவு தொகையினை செயலாளர், விலங்குகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் அமைப்பு உடனடியாக பெற இயலாததால், விலங்குகள் நல வாரியத்திடமிருந்து இம்மாநகராட்சியே மேற்படி 50% செலவு தொகையினை நேரடியாகப் பெற்றுக்கொள்ளவும், கருத்தடைப் பணிகள் மேற்கொள்ள ஆகும் செலவினத்தை விலங்குகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் அமைப்பிற்கு இம்மாநகராட்சி வழஙகிடவும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

4. விலங்குகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம், திண்டுக்கல் அமைப்பு உடனான புரிந்துணர்வு ஒப்பந்தம் (2017–18) விலக்கிக்கொள்ளப்பட்டதைத் தொடர்ந்து, புதிய விலஙகுகள் நல அமைப்பு பொறுப்பேற்கும் வரை மேற்கண்ட விலஙகுகள் நல அமைப்பு, கோவிந்தாபுரம் , திண்டுக்கல் அமைப்பு தொடர்ந்து பணிகள் மேற்கொள்ளவும், தெரு நாய்கள் காப்பகம் மற்றும் நாய் பிடிக்கும் வாகனத்தைப் பராமரித்திடவும் அனுமதிக்கலாம்.

---

**14)** இம்மாநகராட்சியில் உதவியாளராகப் பணிபுரிந்து வரும் திரு.சா.அருள்முருகன், தனது மனைவியின் உடல்நிலை சரியில்லாத காரணத்தினால் உடனிருந்து மருத்துவம் பார்க்க வேண்டியுள்ளதாகவும், திண்டுக்கல் மாநகராட்சிப் பணியாளர்களை ஈர்த்து உத்தரவிடப்பட்ட அரசாணை எண்.186, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு துறை, நாள் 22.12.2015 ல்

தனது பெயர் இடம் பெறாததாலும், காரைக்குடி நகராட்சியில் தற்போது காலியாக உள்ள உதவியாளர் பணியிடத்தில் பணி மாதல் செய்யும்படி கோரியுள்ளார். மேற்படியாரின் விண்ணப்பத்தினை பரிந்துரை செய்து நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு அனுப்பிட மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண். 4382 / 2018 / சி 1)

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**15)** திண்டுக்கல் மாநகராட்சி பொறியர் பிரிவு குடிநீர் கசிவு கண்டறியும் வாகனம் எண் டி. என்- 57 க்யு 3255 க்கு தகுதி சான்று புதுப்பிக்க பாரமரிப்பு பணிகள் மேற்கொள்ள கீழ்க்கண்ட நிறுவனங்களிடமிருந்து ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ.எண். | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்தப்புள்ளித் தொகை ரூபாயில் |
|---|---|---|
| 1 | குமார்ஆட்டோ கேர் | ரூ.38800.00 |
| 2 | விநாயகா ஆட்டோ மொபைல்ஸ் | ரூ.40300.00 |

மேற்கண்ட இரு ஒப்பந்தப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர் நிறுவனத்தினரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்பது குறித்து மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. ( ந.க.எண்.17554/ 2017/ இ3 )

<u>அலுவலக குறிப்பு</u>

வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட குறைவாக ரூ.38800/—க்கு ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள குமார் ஆட்டோ கேர், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம். மேலும் குடிநீர் பணியின் அவசர அவசியத்தை கருத்தில் கொண்டு முன் அனுமதி பெற்று வேலை உத்திரவு வழஙகியமைக்கும் மாமன்றம் அனுமதிக்கலாம்.

---

**16)** இம் மாநகராட்சியில் பொது நிதி 2018–19 ன் கீழ் தெருவிளக்கு பராமரிப்புப் பணி மேற்கொள்ள மின் உதிரி பாகங்கள் விநியோகம் செய்யும் பணிக்கு 23.04.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரண்டு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| வ.எண். | ஒப்பந்தக்காரரின் பெயர் | விலைவிகிதம் | முன் வைப்புத் தொகை |
|---|---|---|---|
| 1) | கிளாசிக் எலக்ட்ரிகல்ஸ் அண்ட் பைப்ஸ் | 0.02 % மதிப்பீட்டிற்கு குறைவு | ரூ.10000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |
| 2) | திரு.எ. மோகன் | 5.89 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |

(ந.க.எண். 1489 / 2017 / இ4)

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.10,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண்.961 நாள் 12.02.2018 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

2) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரண்டு ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டை விட 0.02% குறைவாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள கிளாசிக் எலக்ட்ரிகல்ஸ் அண்ட் பைப்ஸ், ஒப்பந்ததாரரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

---

**17)** திண்டுக்கல் மாநகராட்சியில் எல்லைக்குட்பட்ட பகுதிகளில் பொது மக்கள் பயன்பாட்டிற்கான புதிய குடிநீர் குழாய் இணைப்பு வழஙகப்பட்டு வருகிறது. இதில் குடிநீர் குழாய் வைப்புத்தொகை மற்றும் குழாய் பாரமரிப்புக் கட்டணம் மாநகராட்சியால் வசூல் செய்யப்பட்டு வருகிறது. கீழ்க்கண்ட விண்ணப்பதாரர்கள் குடிநீர் குழாய் வைப்புத்தொகை மற்றும் குழாய் பாரமரிப்புக் கட்டணத்தை தவறுதலாக இருமுறை மாநகராட்சியில் செலுத்தியுள்ளார்கள். அதற்கான இரசீதை இணைத்துள்ளார்கள். தவறுதலாக செலுத்தப்பட்ட தொகையினை திரும்ப வழஙகிட கோரியுள்ளார்கள்.

| வ.எண். | பெயர் / முகவரி | புதிய குடிநீர் வைப்புத்தொகை மற்றும் குழாய் பாரமரிப்பு கட்டணம் செலுத்தியது. ரூ. | இரசீது எண்/ தேதி | தவறுதலாக செலுத்தியது ரூ. | இரசீது எண்/ தேதி |
|---|---|---|---|---|---|
| 1 | எஸ்.சரவணன், 26/1, குயவர் 1வது சந்து , திண்டுக்கல் | 14548/– | 0047977 / 18.11.2016 | 10,000/– | 009520 / 21.06.2016 |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 2 | டி.சண்முகநாதன், 64/46, டி.எம்.சி.காலனி | 17346/- | 0026599 / 01.09.2016 | 17,346/- | 0052699 / 02.12.2016 |

எனவே, மேற்கண்ட மனுதாரர்களுக்கு தவறுதலாக செலுத்திய குடிநீர் குழாய் வைப்புத்தொகை மற்றும் குழாய் பாரமரிப்புக் கட்டணம் மொத்தம் ரூ. 27,346/- காசோலையாக குடிநீர் நிதியிலிருந்து திரும்ப வழங்க மாமன்றத்தின் அனுமதி வேண்டி மாமன்றப் பொருள் வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 20282/2016/இ2)

<u>அலுவலகக் குறிப்பு</u>

மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

---

**18)** திண்டுக்கல் மாநகராட்சி தணிக்கைப் பத்திகள், வரவு செலவின அறிக்கை, சம்பளப் பட்டியல்கள், தடை சீட்டுகள், அலுவலக பணிகள் மற்றும் அவ்வப்போது செய்யப்படும் இதர பணிகள் ஆகியவற்றை கணினியில் உடனுக்குடன் தட்டச்சு செய்ய போதிய தட்டச்சர் மற்றும் கணினியில் தட்டச்சு செய்யும் பணியாளர்கள் இம்மாநகராட்சி அலுவலகத்தில் இல்லாததால் தனியார் கணினி பயிற்சி நிறுவனத்தின் வாயிலாக ஒரு தட்டச்சர் மற்றும் கணினியில் தட்டச்சு செய்யும் பணியாளரைக் கொண்டு செய்யும் பணிக்காலம் 31.03.2018 உடன் முடிவடைந்துவிட்டது. மேற்படி பணியை தொடர்ந்து செய்வதற்கு 01.04.2018 முதல் 31.03.2019 முடிய ஓராண்டு காலத்திற்கு தட்டச்சு பணிகளை ஏற்கனவே செய்து வந்த அதே நிறுவனத்தின் வாயிலாக மேற்கொள்ள மாதம் ஒன்றுக்கு உத்தேசமாக ரூ 9500/- வீதம் ஓராண்டிற்கு செலவினம் ரூ 1,14,000/- (ஒரு லட்சத்து பதினான்காயிரம் மட்டும்) மாமன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது. (ந.க.எண்4381/2018/பி7)

<u>அலுவலகக் குறிப்பு</u>

இச்செலவினத்தை பொது நிதியில் மேற்கொள்ள அனுமதிக்கலாம்.

---

**19)** இம் மாநகராட்சியில் தூய்மை இந்தியா திட்டம் 2017–18 ன் கீழ் வார்டு எண்.10 செல்லாண்டியம்மன் கோவில் தெருவில் கழிப்பிடம் கட்டும் பணிக்கு 27.03.2018 அன்று முதல் முறையாக ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் இரு ஒப்பந்தப்புள்ளிகள் மட்டும் கீழ்க்கண்ட விபரப்படி வரப்பெற்றது.

| **வ.எண்.** | **ஒப்பந்தக்காரரின் பெயர்** | **விலைவிகிதம்** | **முன் வைப்புத் தொகை** |
|---|---|---|---|
| 1) | ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ் | 4.98 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |
| 2) | திரு.என்.மணிகண்டன் | 10.00 % மதிப்பீட்டிற்கு கூடுதல் | ரூ.10000/– மதிப்புள்ள வஙகி வரைவோலை |

(ந.க.எண். 7951 / 2014 / இ4 )

<u>அ.குறிப்பு</u>

1) ரூ.10,00,000/– மதிப்பீட்டில் தயார் செய்யப்பட்ட இப் பணிக்கு மாமன்றத் தீர்மானம் எண்.1012, நாள் 12.02.2018 ல் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

3) முதல் அழைப்பில் வரப் பெற்ற இரு ஒப்பந்தப்புள்ளிகளுமே மதிப்பீட்டை விட கூடுதலாக அளிக்கப்பட்டுள்ளன. பணியின் அவசர அவசியம் கருதியும், திட்டப் பணி என்பதாலும், பணியினை விரைந்து முடித்து முடிவறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியுள்ளதாலும், வரப் பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் கூடுதலில் குறைவாக மதிப்பீட்டை விட 4.98% கூடுதலாக ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜெகதீஸ்வரி கன்ஸ்ட்ரக்ஷன்ஸ், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை ஏற்கலாம்.

4) மேலும் கூடுதலாகும் செலவினத் தொகையினை பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றம் ஒப்புதல் வழங்கலாம்.

---

**20)** நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் சுற்றறிக்கை மற்றும் கடிதம் ந.க.எண். 7234/2014/ஆர்1 நாள் 15.03.2018 மற்றும் 28.03.2018ன் படி மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள விலக்களிக்கப்பட்ட கட்டிடங்கள் தவிர்த்து, கல்வி பயன்பாட்டில் உள்ள கட்டிடங்கள் உட்பட ஏனைய கட்டிடங்கள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்க அளவீட்டு பணி மேற்கொள்ள நகரமைப்பு ஆய்வர்களுக்கு அறிவுறுத்தப்பட்டு அளவீட்டு பணிகள் முடிக்கப்பட்டன.

மேற்கண்ட கல்வி நிறுவனஙகளுக்கு சொத்து வரிவிதிக்கும் விவரத்தினை உரிய கல்வி நிறுவனஙகளுக்கு அறிவிக்கை செய்ய மாமன்ற அனுமதி வேண்டப்படுகின்றது.

மேலும், கல்வி நிறுவனஙகளுக்கு சொத்து வரி விதிக்கும்போது பின்பற்றப்பட வேண்டிய நடவடிக்கைகள் விவரம்,

- கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 123(சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின்படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளுக்கு, சொத்து வரியிலிருந்து விலக்களிக்கவும்,
- கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 123(சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின் படி, விலக்களிக்கப்பட்ட கட்டிடஙகளை தவிர்த்து, கல்வி பயன்பாட்டிற்கான கட்டிடஙகள் உட்பட ஏனைய கட்டிடஙகள் அனைத்திற்கும் சொத்து வரி விதிக்கவும்,
- கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம்1981, பிரிவு 123(சி)ற்கு வெளியிடப்பட்ட திருத்தத்தின் படி, கல்வி பயன்பாட்டிற்காக அரசின் உதவி பெற்று நடத்தப்படும் நிறுவனஙகள் சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் பட்சத்தில் அந்நிறுவனஙகளின் கட்டிடஙகளுக்கு சொத்து வரி விதிக்கவும்,
- கல்வி பயன்பாட்டிற்கான அனைத்து கட்டிடஙகள் மற்றும் கல்வி பயன்பாட்டிற்கான அரசின் உதவி பெற்று சுயநிதி படிப்புகளை நடத்தி வரும் நிறுவனஙகள் கட்டிடஙகள் ஆகியவற்றின் மீது குடியிருப்பிற்கு விதிக்கப்படும் சொத்து வரி விகிதத்தில் 1.5 மடஙகு சொத்து வரியாக விதிக்கவும்

| பகுதியின் விபரம் | குடியிருப்புகளுக்கான வரி தொகை (ரூபாயில்) | | | பள்ளி / கல்லூரிகள் குடியிருப்பிலிருந்து 1.5 மடஙகு சொத்து வரி தொகை (ரூபாயில்) | | |
|---|---|---|---|---|---|---|
| | Rcc | Tiled | Thatched | Rcc | Tiled | Thatched |
| A | 2.90 | 2.18 | 1.45 | 4.35 | 3.27 | 2.17 |
| B | 2.34 | 1.75 | 1.17 | 3.51 | 2.62 | 1.75 |
| C | 1.78 | 1.33 | 0.89 | 2.67 | 1.99 | 1.33 |
| D | 1.22 | 0.91 | 0.61 | 1.83 | 1.36 | 0.91 |

- கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம் 1981, பிரிவு 123(சி)ற்கு திருத்தம் வெளியிடப்பட்டுள்ள காலமான 2017–18 இரண்டாம் அரையாண்டிலிருந்து மேற்படி கட்டிடஙகளுக்கு சொத்து வரி விதிக்கவும்,
- கோயம்புத்துார் மாநகராட்சி சட்டம், 1981 பிரிவு 118ன் படி ஆட்சேபனைகளை அளிப்பதற்காக அலுவலக அறிவிப்பு பலகையில் ஒட்டி அறிவிப்பு செய்வதற்கும் அனுமதி அளித்துள்ளது.

மேற்கண்ட விவரப்படி திண்டுக்கல் மாநகராட்சி எல்லைக்குட்பட்ட அனைத்துப் பள்ளி / கல்லூரி நிர்வாகத்தினரிடம் தெரிவித்து 30 நாட்களுக்கு பின்னர் சொத்து வரி விதிப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படுமெனவும் தெரிவிக்க மாமன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**(ந.க.எண். 7226/2016/அ1)**

**<u>அலுவலகக் குறிப்பு</u>**

மாமன்றம் அனுமதிக்கலாம்.

---